[1993 மார்ச் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ப. சரஸ்வதி.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே எங்களுடைய பகுதியில் ஆயிரம் அடிக்கு போர் போட்டாலும் 6 மாதத்தில் வற்றி விடுகின்ற காரணத்தால் இந்தக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாகத்தான் இராசிபுரம் சேந்தமங்கலம் போன்ற பகுதிகளுக்கு நிரந்தர குடிநீர் தீர்வு காண முடியும். அந்தப் பகுதியில் 2 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ஆய்வில் இருந்தாலும் இந்த சேந்தமங்கலம் இராசிபுரம் பகுதிகளுக்குச் சென்று அடைய முடியவில்லை. ஏற்கெனவே தீட்டப்பட்டு இருக்கக்கூடிய கால்நடைக் கல்லூரியினுடைய கூட்டுக் குடிநீர்த் திட்டம் இன்னும் காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. அதை நிறைவேற்றக்கூடிய காலக் கட்டத்தில் இந்த கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் அருகில் காவிரி ஆறு செல்லுகின்ற காரணத்தால் காவிரி ஆற்றிலிருந்து 15 கிலோ மீட்டர் வரை குடிநீர் எடுத்துக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். மற்ற மக்கள் எங்களுக்கு பட்டும் எங்களுடைய தலைவியினுடைய ஆட்சியில் ஏன் தண்ணீர் கொடுக்கக்கூடாது என்று சட்டமன்ற உறுப்பினராகிய எங்களிடத்திலே வாதிடுகிறார்கள். சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் இராசிபுரம் சட்டமன்ற உறுப்பினர் நான் அனைவரும் சேர்ந்து தங்களிடத்திலே வேண்டிக் கேட்டுக் கொள்வது கிராம குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் செய்து நிறைவேற்றித் தருவார்களா என கனிவுடன் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கூறிய 2 திட்டங்களும் 1994 ஆம் ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றப்படும். நிறைவேற்றி முடிக்கிற தருவாயில் மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற மேற்கூறிய பகுதிகளும் இதிலே உள்ளடக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 132, திருமதி ஜெ. லோகாம்பாள், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

132 —

புள்ளம்பாடிக்குக் கொள்ளிடத்திலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம்

*10378 — திருமதி ஜெ. லோகாம்பாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா --

(அ) லால்குடி தொகுதியில் புள்ளம்பாடிக்குக் கொளளிடத்தில் இருந்து குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டம் எந்தநிலையில் உள்ளது ?

(ஆ) இத்திட்டம் எப்போது முடிவடையும் ?

1993 மார்ச் 18]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருச்சி மாவட்டத்தில் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் கல்லக்குடி-புள்ளம்பாடி குடிநீர்த் துணைத் திட்டத்தின் அனைத்து பணிகளும் செய்து முடிக்கப்பட்டு வருகிற 1992 முதல் பொதுமக்களுக்கு முறையான குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

திருமதி ஜெ. லோகாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எங்கள் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 133, திரு. நா.சா. பழனிசாமி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

133—

ரேசன் கடைகளில் சிறு தானியங்கள் வழங்குதல்

*10983 —திரு. நா.சா. பழனிசாமி: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ரேசன் கடைகளில் அரிசி கோதுமையுடன் புரதச்சத்து அதிகமுள்ள மற்ற சிறுதானியங்களையும் விநியோகிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசிய பண்டங்களை விநியோகிப்பதைத் தவிர சிறு தானியங்களையும் விநியோகிப்பதைப் பற்றிய செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசினிடத்தில் இல்லை.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு தானியங்கள் என்றாலே அனைத்துமே அத்தியாவசியப் பொருட்கள் பட்டியலில் தான் வருகிறது. இன்றைக்கு சிறு தானியங்கள் மானாவாரியிலும், கிணற்றுப் பாசனத்தின் மூலம் பயிர் செய்கின்ற விவசாயிகளுக்கு அரசின் கொள்முதல் சலுகை கொடுக்கப்படுவது இல்லை. எனவே, அரசு இந்த புரதசத்து மிக்க இந்த தானியங்களையும் கொள்முதல் செய்து ரேஷன் கடைக்ளில் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.